රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**
**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය
தொலைபேசி: **(94) 011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்: **(94) 011- 2692254**
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணையத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/05/03/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2017.12.14

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
அனைத்து திணைக்களத் தலைவர்கள்/
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/
அனைத்து பிரதேச செயலாளர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III மற்றும் தரம் II அலுவலர்களது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பானது.</u>**

குறித்த விடயம் தொடர்பில் எனது சம இலக்கம் மற்றும் 2016-06-10 ஆந் திகதிய மற்றும் 2017-08-22 ஆந் திகதிய கடிதத்திற்கு மேலதிகமானது.

02. 2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனம் வழங்கப்பட்ட அலுவலர்களிற்கு சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் எனும் ரீதியில் தகுதிகூர் நிலைக்காலப்பகுதிக்குள் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சை 6 தடவைகள் நடாத்தப்படுவது அவசியமெனினும், தகுதிகூர் நிலைக் காலப்பகுதியினுள் ஒரு தடவையும் தகுதிகூர் நிலைக் காலப்பகுதியின் பின் ஒரு தடவையுமாக இதுவரை இரு தடவைகள் மாத்திரம் பரீட்சைகள் நடைபெற்றுள்ளன.

03. சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கைக்கு சமனான தடவைகளில் இப் பரீட்சைகள் நடைபெறாமையினால் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யத் தவறிய அலுவலர்களிற்கு அவர்களுடைய சேவை மூப்பிற்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு, சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்துவதற்கு உத்தேசித்துள்ள பரீட்சைத் தடவைகள் எண்ணிக்கையினுள் உள்ளடங்கும் பரீட்சைத் தடவைகளினுள் வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல.03/2016 இன் படி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

04. அதன்படி வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின் மாத்திரம் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 03/2016 இன் பிரகாரம் சலுகைக் காலத்தை நான் அனுமதியளித்ததன் பின்னால் வருடாந்த வேதன ஏற்றத்தை வழங்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்